அ.தி.மு.க. ஆட்சியில் கடன் வளர்ச்சி விகிதம் 128 சதவிகிதம்: தி.மு.க. ஆட்சியில் கடன் வளர்ச்சி விகிதம் 93 சதவிகிதம் என்றால்

தமிழ்நாட்டில் பொருளாதாரம் வளர்ந்திருக்கிறதையே இது காட்டுகிறது!

சட்டப் பேரவையில் அ.தி.மு.க. உறுப்பினரின் பேச்சுக்கு அமைச்சர் தங்கம் தென்னரசு விளக்கமான பதில்!

சென்னை, மார்ச் 19 -

அ.தி.மு.க. ஆட்சியில் கடன் வளர்ச்சி விகிதம் 128 சதவிகிதம் ஆனால் தி.மு.க. ஆட்சியில் கடன் வளர்ச்சி விகிதம் 93 சத விகிதம் என்றால், தமிழ்நாட்டில் பொருளாதாரம் வளர்ந்திருக்கிறதையே இது காட்டுகிறது என்று அ.தி.மு.க. உறுப்பினர் கே.பி.முனுசாமி கடன் பற்றி பேசிய போது குறுக்கிட்டு அமைச்சர் தங்கம் தென்னரசு விளக்கமான பதிலளித்தார்.

அவர் அளித்த பதில் வருமாறு:-

இந்த வளர்ச்சி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கிற எல்லாவிதமான முயற்சியின் காரணமாக இந்தியாவினுடைய வளர்ச்சி விகிதம் குறைவாக இருக்கக்கூடிய காலகட்டத்தில் தமிழ்நாட்டினுடைய வளர்ச்சி விகிதம் அதைவிட 2 மடங்கு பெரிய அளவிலே உருவாகி இருப்பதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய நடவடிக்கை. (மேசையைத் தட்டும் ஒலி)

One Trillion Dollar Economy என்பது ஒரு இலக்கு. அந்த இலக்கை முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு வைக்கின்றபோது, இந்த இலக்கை நோக்கி உங்களுடைய பயணத்தை நீங்கள் மேற்கொள்ளுங்கள். தமிழ்நாட்டினுடைய பொருளாதாரம் இன்றைக்கு இந்திய பொருளாதாரத்தில் இரண்டாவது மிகப்பெரிய பொருளாதாரம். மற்ற எந்த மாநிலங்களையும் விட நீங்கள் ஒப்பீட்டளவில் பார்ப்பீர்களென்று சொன்னால் நம்முடைய மாநிலத்தினுடைய பொருளாதாரம் மிகப்பெரிய பொருளாதாரம். இன்னொரு படி மேலே சென்று சொல்வோமானால், நீங்கள்கூட குறிப்பிட்டு சொன்னீர்களே, பேரிடர், கொரோனா போன்ற காலங்களில்கூட பொருளாதாரமந்த நிலையில் மற்ற மாநிலங்களில் எல்லாம் தடுமாறிக் கொண்டிருந்த நேரத்தில் ஒரு resilient economy ஆக அந்த economy இருக்கக்கூடிய ஒரு அடிப்படையான, வலுவான கட்டமைப்பை தமிழ்நாட்டினுடைய பொருளாதாரம் மேற்கொண்டிருக்கிறது.

அந்தக் காலக்கட்டத்தில் மீண்டும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பு ஏற்றதற்கு பிறகுதான் அதிலே இருக்கக்கூடிய தொய்வுகளை எல்லாம் நீக்கி, இன்றைக்கு 14 சதவிகிதத்திற்கும் மேலாக ஒரு மாபெரும் வளர்ச்சியை கொண்டு வந்திருக்கக்கூடிய ஒரு திட்டங்களை உருவாக்கிய பெருமை முதலமைச்சர் அவர்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே, இந்த வளர்ச்சி விகிதம் உங்களுடைய calculations என்பது உங்களுடைய இந்த கணக்கு வழக்குகளைவிட உங்களுடைய wishful thinking என்று சொல்வார்கள். இது இப்படியே இருந்துவிடாதா என்கின்ற உங்களுடைய நட்பாசையினுடைய அடிப்படையில் சில கணக்குகளை வேண்டுமானால் நீங்கள் போடலாமே யொழிய முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய நடவடிக்கைகளின் காரணமாக One Trillion Dollar Economy என்பது ஏதோ ஒரு எய்த முடியாத இலக்கு அல்ல. இதே வேகத்தில் நம்முடைய பொருளாதார நடவடிக்கைகளை முடுக்கி விடுவீர்கள் என்று சொன்னால், இந்த இலக்கை நிச்சயமாக நம்மால் எட்ட முடியும் என்பதை நான் உங்களுக்கு தெரிவிப்பேன்.

இன்னொன்று வழக்கப்படி, பழைய பல்லவியையே நீங்கள் ஆரம்பித்திருக்கிறீர்கள். என்ன சொல்கிறீர்கள், கடன் வாங்குறீர்கள், கடன் வாங்குறீர்கள் என்று கடன் பல்லவிக்கே மீண்டும் வருகிறீர்கள். நான் பலமுறை இந்த அவையிலும் சொல்லியிருக்கிறேன். இந்த அவைக்கு வெளியிலும் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். கடன் வாங்குவதை எப்போதும் நீங்கள் rupee terms--in terms of rupees அல்லது absolute number-ல் நீங்கள் பார்க்காதீர்கள். கடன் வாங்குவது என்பதை நாட்டினுடைய மொத்த உள்நாட்டு உற்பத்தியினுடைய அடிப்படையில் அதனுடைய விகிதத்தில் எத்தனை சதவிகிதம் நீங்கள் கடன் வாங்குகிறீர்கள் என்பதுதான் அதற்கான சரியான அணுகுமுறை என்பதே தவிர, இவ்வளவு இலட்சம் கோடி ரூபாய் வாங்குறீர்கள், அவ்வளவு இலட்சம் கோடி ரூபாய் வாங்குறீர்கள் என்பதை நீங்கள் தயவு செய்து சொல்லாதீர்கள். நான் ஒரு புள்ளிவிவரத்தை விவரமாக இன்றைக்கு உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். நான் அதற்கு முன்பாக கூட ஒன்று சொல்கிறேன். கடன் வாங்குகிறோம் என்று சொல்கிறீர்கள். அந்த கடனை நாம் மட்டுமா வாங்குகிறோம். இந்திய திருநாட்டினுடைய நம்முடைய அரசு வாங்குகிறது. எவ்வளவு வாங்குகிறது? இந்தியாவினுடைய நிலுவை கடன் தொகையை எடுத்துக்கொண்டால் ரூபாயினுடைய மதிப்பில் நான் சொல்கிறேன், எத்தனை இலட்சம் கோடி ரூபாய் என்று கேட்டால் இந்தியாவினுடைய கடன் தொகை 181.74 இலட்சம் கோடி ரூபாய் இந்தியா கடன் வாங்குகிறது. அதேபோல் அமெரிக்காவை எடுத்துக்கொண்டீர்களென்று சொன்னால், அது 3,149 இலட்சம் கோடி ரூபாய் அமெரிக்காவினுடைய கடன் வாங்கக்கூடிய தொகையாக இருக்கிறது. தமிழ்நாட்டினுடைய இந்த நிலுவை கடன் தொகையை அதற்கு நிகராக நீங்கள் எடுத்துக்கொண்டீர்களென்று சொன்னால், இன்றைக்கு 8 இலட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாய். இந்த 8 இலட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாய் வாங்கும்போது தமிழ்நாட்டோடு அமெரிக்காவை நீங்கள் ஒப்பிட்டு பார்த்தீர்களென்று சொன்னால் நாம் 8 இலட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாய் வாங்குகிறோம் என்று சொன்னால் அவர்கள் கிட்டத்தட்ட 3,149 இலட்சம் கோடி ரூபாய் வாங்குகிறார்கள் என்று சொன்னால், நான் ஒரு தரவுகளிலிருந்து சொல்கிறேன். அப்படியென்றால், அமெரிக்காவினுடைய பொருளாதாரம் என்பது கடன் வாங்கக்கூடிய அளவில் நம்மை விட அவர்கள் அதிகமாக வாங்குகிறார்கள் என்ற காரணத்தினால் அந்த பொருளாதாரம் நம்முடைய பொருளாதாரத்தை விட 350 மடங்கு மோசமான பொருளாதாரமாகும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

நிலுவைக் கடன் அதிகரிக்கிறது!

ஆகவே, கடன் வாங்குவதை அவ்வாறு நீங்கள் கணக்கிட்டு பார்ப்பீர்களென்று சொன்னால், அது நிச்சயமாக இருக்க முடியும். எனவே, மீண்டும் நான் இந்த அவைக்கும், உறுப்பினருக்கும் சொல்கிறேன், மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பின் விகிதத்திலே நீங்கள் தொடர்ந்து சொல்ல வேண்டும். அந்த அடிப்படையிலேகூட நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். கடன் வாங்குவது நாங்கள் மட்டுமா வாங்கி இருக்கிறோம். நீங்கள் உங்களுடைய ஆட்சிக் காலத்தில் வாங்கவில்லையா? அந்த நிலுவைக் கடன் ஏன் அதிகரிக்கிறது? 2011-லிருந்து. . . (குறுக்கீடு) அதற்கு நான் வருகிறேன். 2011-லிருந்து 2015-16 வரை நீங்கள் எங்களுடைய தலைவருடைய பெயரை குறிப்பிட்டு சொன்னீர்கள். If I want to pay you in the same currency, I could have even mentioned your leader's name. ஆனால், நாகரிகம் கருதி, இந்த அவையினுடைய மாண்பைக் கருதி நான் தவிர்த்துவிட்டு சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மையார் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், ஆரம்பக் கடனாக அன்றையதினம் 1,01,349 கோடி ரூபாய் இருந்தது. இறுதிக் கடன் 2,11,066 கோடி ரூபாய். கடனுடைய வளர்ச்சி விகிதம், 108 சதவிகிதம் ஆக இருந்தது. அதற்குபிறகுதான் எங்கள் ஆட்சி வந்தது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 2016-2017 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையில், அப்போது விட்டுவிட்டுப்போன கடன், ரூ.2,11,066 கோடி. நீங்கள் உங்கள் ஆட்சிக்காலம் முடியும் தருவாயில் விட்டுவிட்டுச் சென்ற கடன், ரூ.4,80,300 கோடி ரூபாய். உங்கள் ஆட்சிக் காலத்தில் கடனின் வளர்ச்சி விகிதம், 128%. இது பொருளாதார வளர்ச்சியோ அல்லது வேறு வளர்ச்சியோ அல்ல, கடன் வாங்கியதில் வளர்ச்சி. கடன் வாங்கியதில் வளர்ச்சி 128 சதவிகிதம். அதற்கு முன்பான அம்மையார் ஆட்சிக் காலத்தில், 108 சதவிகிதம். அதன் பின்னர் நீங்கள் பொறுப்பேற்றிருந்த காலத்தில் 128 சதவிகிதம். எங்கள் ஆட்சி 2021 ஆம் ஆண்டில் பொறுப்பேற்றபோது, கொரோனா நோய்த்தொற்று ஏற்பட்ட காலத்தில், மிகப் பெரிய நெருக்கடி இருந்தது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டு, 2021-2022 முதல் 2025-2026 Budget Estimates வரை, நீங்கள் விட்டுவிட்டுச் சென்ற அந்த ஆரம்ப தொகையான 4,80,300 ரூபாயிலிருந்து தற்போது ரூ.9,29,099-க்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இதன் கடன் வளர்ச்சியானது, வெறும் 93 சதவிகிதம் தான். கடன் வளர்ச்சி சதவிகிதமானது, 2021 ஆம் ஆண்டிலிருந்து, 2025-2026 வரையில், இந்த அரசு பெற்றிருக்கக்கூடிய கடன் வளர்ச்சி விகிதம், 93 சதவிகிதம் மட்டுமே. ஆனால், நீங்கள் 2016-2017 ஆம் ஆண்டிலிருந்து 2020-2021 ஆம் ஆண்டு வரையில் பெற்றுள்ள கடன் சதிவிகிதமானது, 128 ஆகும். நாங்கள் வாங்கியிருக்கக்கூடிய இந்தக் கடன் உயர்வானது அதிகம் என்று நீங்கள் குற்றம் சாட்டுகிறீர்கள் என்றால், 2011-2012 முதல் 2020-2021 காலகட்டத்தில் நீங்கள் வாங்கியிருக்கக்கூடிய கடன் உயர்விற்கு நீங்கள் என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்? திரும்ப திரும்ப 9.00 இலட்சம் அதிகம் கடன் சொல்கிறீர்கள். இந்த ரூ.9.00 இலட்சத்தில் நீங்கள் உங்கள் காலத்தில் பெற்றிருந்த 5.00 இலட்சம் கடன் அளவும் சேர்த்துதான் உள்ளது. அதையும் சேர்த்துதான் கணக்கிடப்பட வேண்டும். எனவே, நான் சொல்ல வருவது, கடன் என்பது, பல்வேறு காலகட்டங்களில் அரசு பெறுவது. உங்கள் ஆட்சிக் காலத்தற்கு முன்பு எங்கள் ஆட்சிக்காலத்தில் பெற்றிருந்த கடன் தொகை உங்கள் ஆட்சிக் காலத்தில் carry forward ஆனது. கடன் வாங்குவது அனைத்து கட்சிகளும் ஆட்சியில் வாங்குவதுதான். அதில் அரசியல் வரக் கூடாது. கடன் வாங்குவது பொருளாதாரரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று. நீங்களும் உங்கள் ஆட்சியில் வாங்கியிருக்கிறீர்கள். பொருளாதாரம் வளர்ந்திருக்கிறது. கடன் வளர்ச்சி யைப் பார்க்கும்நேர்வில், 93 சதவிகிதம் கடன் வளர்ச்சி என்றால் அந்த அளவில் மாநிலத்தில் பொருளாதாரம் வளர்ந்துள்ளது என்பதையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மெட்ரோ ரயில் திட்டம்!

மெட்ரோ இரயில் திட்டத்திற்கான முழு பங்கையும் ஒன்றிய அரசு கொடுக்கிறது என்று சொல்கிறதா? இல்லை. மாநில அரசு இன்றைக்கு ஏற்றுக்கொள்கிறது. கல்விக்கு பணம் கொடுக்கமாட்டேன் என்று சொல்கிறார்கள். யார் இவற்றையெல்லாம் ஏற்றுக் கொள்கிறார் என்றால் முதலமைச்சர் அவர்கள். நம்முடைய சொந்த மாநிலத்தின் நிதி வருவாயிலிருந்து கொடுக்கிறோம். ஆக, இத்தகைய சுமைகளையெல்லாம் வரிசையாக நாம் ஏற்றுக் கொள்கிற போது, மாநில அரசு கடன் வாங்குகிறது, CapEx மட்டுமல்லாமல், நீங்கள் மனதிலே கொள்ள வேண்டும். முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற சமூக நலத் திட்டங்கள் அத்தனையும், அவையெல்லாம் mere expenditure செலவினங்கள் கிடையாது. அது social investment. நீங்கள் எப்படி CapEx என்று சொல்கிறீர்களோ, மூலதனத்தில் நீங்கள் முதலீடு செய்ய வேண்டும் என்று சொல்கிறீர்களோ அதற்கு இணையானத் தொகை முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு தமிழ்நாட்டு மக்களுடைய நலவாழ்வுத் திட்டங்களுக்கு அளித்துக் கொண்டிருக்கிறார். இன்றைக்கு மகளிர் நல உரிமைத் திட்டத்திற்கு ரூ.13 ஆயிரம் கோடிக்கு மேல் கொடுக்கிறோம். மகளிர் விடியல் பணத்திற்கு ரூ.3 ஆயிரம் கோடிக்கு மேல் தருகிறோம். இவையெல்லாவற்றையும் நீங்கள் கணக்கிலே எடுத்துக் கொள்ள வேண்டும். தமிழ்நாடு அரசு கடன் வாங்கினாலும், அந்தக் கடனை முறையான வகையில், சரியான வகையில், மக்கள் நல வாழ்விற்கு செலவழிக்கக்கூடிய வகையில்தான் நாங்கள் அந்தக் கடன்களை வாங்குகிறோம். இன்னும் சொல்ல வேண்டும் என்றால், நிதிக் குழு எந்த விகிதத்தில் நிர்ணயித்திருக்கிறார்களோ, அந்த விகிதத்திற்கு உட்பட்டுதான் நம்முடைய கடன் இருக்கிறது. அதுகுறித்து நேற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட உங்களில் ஒருவன் என்பதிலே கடனுடைய வளர்ச்சி விகிதத்தைப் பொறுத்தமட்டில், தமிழ்நாடு எவ்வாறு மிகக் குறைவாகக் கையாண்டிருக்கிறது என்பதை விளக்கியிருக்கிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு விளக்கமளித்துப் பேசினார்.

சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் விரைவில் திறக்கப்படவுள்ள சர். ஜான் ஹுபர்ட் மார்ஷல் அவர்களது திருவுருவச் சிலை அமைக்கும் பணியை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் உயரதிகாரிகள் வே.ராஜாராமன், கவிதா ராமு, முனைவர் ந.அருள் ஆகியோர் உள்ளனர்.

இன்று முதல் இரு நாட்கள் நடைபெறுகிறது!

சென்னை - தமிழ்நாடு இசைக் கல்லூரியில் தமிழிசை விழா!

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் சிறப்புரையாற்றுகிறார்!

சென்னை, மார்ச் 19-

சென்னை, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் 2024 - 2025 ஆம் கல்வியாண்டில் இன்று 19.03.2025 மற்றும் 20.03.2025 ஆகிய இரண்டு நாட்கள் தமிழிசை விழா நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பேருரையாற்றுகிறார்.

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் மருத்துவர் க. மணிவாசன், சிறப்புரையாற்றுகிறார்.

கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் சே. ரா.காந்தி மற்றும் அருங்காட்சியங்கள் துறை இயக்குநர் கவிதா ராமு வாழ்த்துரை வழங்குகிறார்.

இவ்விழாவிற்கு வரவேற்புரை வழங்குவதற்கு முனைவர்.பா.சாய்ராம் முதல்வர் (பொ), நன்றியுரை வழங்குவதற்கு ஆ.சரவணன் மிருதங்க விரிவுரையாளர் (சி.நி) ஆகியோர் வழங்குகின்றனர்.

இவ்விழாவில் புகழ் பெற்ற இசை வித்தகர்களின் இசை நிகழ்ச்சிகள் கீழ்க்கண்டவாறு நடைபெற உள்ளன.

19.3.2025 புதன்கிழமை

நாதசுர இசை நிகழ்ச்சி: காலை 10.30 முதல் 12.30 மணி - கலைச் சுடர்மணி மயிலை பி.வரமூர்த்தி, குன்றத்தூர் டி.வெங்கடேசன் - நாதசுவரம்,

தவில் செல்வம் திருக்கடையூர் டி.ஜி.பாபு - சிறப்பு தவில், தவில் ஸ்வர்ண நாத மணி ஈகுவார் பாளையம், இ.வி.கணபதி - தவில்.

பரதநாட்டிய நிகழ்ச்சி: பிற்பகல் 2.00 முதல் 4.00 மணி - கலை மாமணி திருமதி. பத்மலட்சுமி சுரேஷ் - குழுவினரின் பரதநாட்டியம்

20.3.2025 வியாழக் கிழமை

குரலிசை நிகழ்ச்சி: காலை 10.30 முதல் 12.30 வரை, சங்கீதா கலாபாரதி அஸ்வத் நாராயணன் - பாட்டு, சாய்ரக்ஷித் - வயலின், கலை மாமணி சங்கீத கலாநிதி, திருவாரூர் பக்தவச்சலம் - மிருதங்கம், கலைமாமணி பி.எஸ். புருஷோத்தமன் - கஞ்சிரா.

வயலின் நிகழ்ச்சி: பிற்பகல் 2.00 முதல் 4.00மணி, சுனாத கலாநிதி டி.வி. ராமானுஜாசார்லு - வயலின், பெங்களூர் விபிரவின் - மிருதங்கம், மைசூர் எம். குருராஜ் - முகர்சிங்.

மேலும், கல்லூரியின் 2024-2025 ஆம் ஆண்டுக்கானஆண்டுவிழா மற்றும் விளையாட்டுப்போட்டிகளின் பரிசளிப்புவிழா ஆகியன 21.3.2025 அன்று நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் கலை பண்பாட்டு இயக்கக இணை இயக்குநர் செல்வி. சி.கீதா பி.எஸ்.சி., எம்.ஏ., விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணாக்கர்களுக்கு பரிசுகள் வழங்கி விழா தலைமையுரையாற்றுகிறார்.

19.03.2025 முதல் 21.03.2025 முடிய தமிழிசை விழா மற்றும் ஆண்டுவிழாவில் இசை வல்லுநர்களின் இசை நிகழ்ச்சிகள் மற்றும் மாணாக்கர்களின் கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுப் மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா அகியன நடைபெற உள்ளது. அனைவரும் வந்து விழாவினை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

தலைமைக் கழக அறிவிப்பு

தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட பி.தர்மசெல்வன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **ஆ. மணி**, பி.காம்., பி.எல்., எம்.பி., (பிரகி நிவாஸ், 84/ஏ1, சேலம் மெயின் ரோடு, பாரதிபுரம், தருமபுரி 636 705) அவர்கள் தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 18.03.2025

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

கருஞ்சட்டைப் பதிப்பகம் நடத்தும்

'பாசிசத்திற்கு எதிரான ஸ்டாலின் குரல்' நூல் வெளியீட்டு விழா!

சுப.வீரபாண்டியன் தலைமை! அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் நூல் அறிமுக உரை! சே.மெ.மதிவதனி பங்கேற்பு!

சென்னை, மார்ச் 19-

கருஞ்சட்டைப் பதிப்பகம் நடத்தும் "பாசிசத்துக்கு எதிரான ஸ்டாலின் குரல்" நூல் வெளியீட்டு விழா சென்னை, அன்பகத்தில் இன்று (19.3.2025 புதன் கிழமை) மாலை 6.00 மணி முதல் 8.30 மணி வரை நடைபெறுகிறது.

'பாசிசத்துக்கு எதிரான ஸ்டாலின் குரல்' எனும் இந் நூல் வெளியீட்டு விழாவுக்கு தோழர்கள் செல்வின் சௌந்தரராஜன், அ.லாரன்ஸ் முன்னிலை வகிக்கிறார்கள்.

தோழர் பெல்.இராசன் வரவேற்புரை நிகழ்த்த இத்லாஸ் உசேன் தொகுப்புரை வழங்குகிறார்.

திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப. வீரபாண்டியன் அவர்கள் தலைமையில் தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் நூல் அறிமுக உரை நிகழ்த்துகிறார். பாசிசத்துக்கு எதிரான அரசியலை தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்ற கழகம் கட்டமைத்தது. அதற்கு ஸ்டாலின் அவர்கள் தலைமை ஏற்று வழி நடத்தினார். பத்தாண்டு காலம் பி.ஜே.பி. ஆட்சியில் என்ன செய்தோம் என்று சொல்வதை விட்டுவிட்டு, வெறும் வெறுப்பு பேச்சை மட்டுமே ஆயுதமாக்கி பாசிசக் கூட்டம் 2024இல் தேர்தல் பிரச்சாரத்தை முன்னெடுத்தது.

பாசிசம் ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்றது போல் தனது உத்தியை மாற்றிக் கொள்ளும் என்ற கருத்தை உறுதி செய்வதுபோல் 2024 தேர்தலில் பிஜேபியின் பிரச்சாரம் அமைந்தது.

பாசிசத்தை வீழ்த்தி மக்களாட்சியை நிலைநாட்ட 2024ஆம் ஆண்டு தேர்தலில் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னெடுத்த பிரச்சாரத்தின் போது ஆற்றிய உரைகளின் தொகுப்பே இந்த நூல். அடுக்கடுக்கான வாதங்களும், ஆழமான பல விளக்கங்களும் இந்நூலில் கொட்டிக் கிடக்கின்றன.

திராவிடர் கழகத் துணைப் பொதுச் செயலாளர் தோழர் மதிவதனி பங்கேற்கும் இந்நிகழ்ச்சியில் தோழர் சாரதா தேவி நன்றி உரையாற்றுகிறார்.

பேரவையில் - இருதய அறுவை சிகிச்சை நிபுணர்

கே.எம்.செரியன் மறைவுக்கு இரங்கல் தீர்மானம்!

சென்னை, மார்ச் 19-

சட்டப்பேரவை நேற்று முன்தினம் காலை கூடியதும் மறைந்த முன்னாள் உறுப்பினர்கள் பி.ஆர்.சுந்தரம், மா.கோவிந்தராஜுலு, வே.குணசீலன் ஆகியோர் மறைவுக்கு இரங்கல் குறிப்பு வாசிக்கப்பட்டது.அதனைத் தொடர்ந்து மறைந்த பிரபல இருதய அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர் கே.எம். செரியன் மறைவுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித்துளிகள் எழுந்து நின்று அமைதி காத்தனர்.

ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானின் தந்தை மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மார்ச் 19-

ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களின் தந்தை தேபேந்திர பிரதான் அவர்களின் மறைவுக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சமூக வலைதளப் பதிவில் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

முன்னாள் ஒன்றிய அமைச்சரும், ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களின் தந்தையுமான தேபேந்திர பிரதான் அவர்களின் மறைவு செய்தி கேட்டு மிகவும் வருத்தமடைந்தேன்.

தர்மேந்திர பிரதான் அவர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த கடினமான காலத்தை கடக்க அவருக்கு வலிமை கிடைக்கட்டும்.

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை வடக்கு: விராலிமலை மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில்

கழகத் தலைவர் - முதல்வர் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்!

இரா.சபாபதி மோகன் சிறப்புரை! அ.இளங்குமரன் தலைமை!

புதுக்கோட்டை, மார்ச் 19-

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் விராலிமலை மேற்கு ஒன்றிய திமுக சார்பில் கழகத் தலைவர் தளபதி அவர்களின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் விராலிமலை செக்போஸ்டில் 14.3.2015 வெள்ளிக்கிழமை மாலை 5 மணி அளவில் விராலிமலை மேற்கு ஒன்றிய செயலாளர் அ.இளங்குமரன் தலைமையில் நடைபெற்றது.

கழக கொள்கைப்பரப்பு செயலாளர், முன்னாள் துணைவேந்தர் முனைவர் இரா.சபாபதி மோகன் சிறப்புரையாற்றினார்.

மேலும் நிகழ்வுகளில் மு.பி.மணி, கே.ஆர்.என். போஸ், தென்னலூர் எம். பழனியப்பன், கவிஞர் சௌமா,

மாத்தூர் எம்.பாலமுருகன், கை.பழனிச்சாமி, சொ.தமிழினியன், இரா. மூக்கையா, என்.எஸ்.கே. நல்லதம்பி, பெ.கண்ணன், இரா.பாலசுப்பிரமணியன், ந.வீராச்சாமி, சி.சி.செல்வம், மு.க.சண்முகசுந்தரம், தேன்கனிப்பட்டி ராஜா, ஏசி செல்வராசு, மூ.சுப்பையா, கே.ரெங்கராஜ், ஆ. பழனிச்சாமி, எம்.ஆர். செல்வம், சே.கிட்டு, ஆர். பி.எஸ். கார்த்திகேயன், பி.ஆறுமுகம், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



திருவெண்ணைய்நல்லூர் முன்னாள் நகர கழக செயலாளர் சோடா கடை தி.வ.ஜெயராமன் அவர்களின் பேத்தி நிரஞ்சனா - ஜெயசூர்யா திருமணத்தில் விழுப்புரம் தெற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். பேரூர் செயலாளர் பூக்கடை கணேசன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.